**செய்தி வெளியீடு எண்: 60/2022** **நாள்: 08.07.2022**

**சென்னை மெட்ரோ இரயில் தலைமை நிர்வாக அலுவலக கட்டிடத்தில் பேரிடர் மீட்பு குழு ஒத்திகை பயிற்சி**

கோயம்பேடு, சென்னை மெட்ரோ இரயில் நிர்வாக அலுவலக கட்டிடத்தில் இயற்கை பேரிடர் காலத்தில் ஏற்படும் விபத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பேரிடர் மீட்பு குழுவினரின் ஒத்திகை பயிற்சி தத்துருபமாக நடைபெற்றது.

தேசிய பேரிடர் மீட்புக்குழு மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு இணைந்து பேரிடர் மீட்பு ஒத்திகை பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் இயற்கை பேரிடர் காலத்தில் எதிர்பாராத வகையில் நிகழும் நிலநடுக்கம், நிலசரிவு, தீ விபத்து, வெள்ளம், புயல், விபத்துகள் மற்றும் நாசவேலையின் போது பொதுமக்களையும், சொத்துகளை காப்பாற்றுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மீட்பு குழுவினர் இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

பேரிடர் மீட்பு குழுவினருடன் காவல்துறை, தீயணைப்புத் துறை, மருத்துவத் துறை, இவர்களின் பணி பங்களிப்பு, செயல்பாடுகள் குறித்து தத்ருபமான ஒத்திகை பயிற்சி நடைபெற்றது.

சென்னை மெட்ரோ இரயில் நிர்வாக இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி (இயக்கம் மற்றும் அமைப்பு) தலைமையில் நடைபெற்ற பேரிடர் மீட்பு குழு ஒத்திகையில் கூறியதாவது:

பேரிடர் காலத்தில் தங்களது உயிரையும் உடமைகளையும் காத்து கொள்ளவது பற்றி இக்குழுவினர் தத்ரூபாக நடத்தி காட்டினர். தேசிய பேரிடர் மீட்பு குழு முதல்முறையாக இந்த ஒத்திகை பயிற்சியினை கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிர்வாக அலுவலக கட்டிடத்தில் நடத்தியுள்ளனர். தேசிய பேரிடர் குழுவினர் அவர்கள் செயல்முறை விளக்கத்தினை முதல்முறையாக நடத்தியது பெருமைக்குரியது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாக முதன்மை பாதுகாப்பு அதிகாரி டாக்டர். பிராபாகரன், அரக்கோணம் தேசிய பேரிடர் மீட்பு குழு உதவி கமாண்டர் பி.சுதாகர், தமிழ்நாடு பேரிடர் மீட்பு குழு கமாண்டர் செந்தில், மாவட்ட தீயணைப்பு அலுவலர் கார்திகேயன், மருத்துவ கல்வி இயக்குநர் அலுவலக மருத்துவர் டாக்டர் செந்தில்குமார், கோயம்பேடு காவல் நிலைய ஆய்வாளர் சந்திரசேகர், தனியார் பாதுகாவலர் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**